**தேதி :** 10.03.2026 **SC.No. :** 31/2014 PW :9 Dr.சண்முகையா

**(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

மருதையாபாண்டியனுக்கு வேறு என்னென்ன காயங்கள் இருந்தது என்றால்

(4). வலது பெருவிரலில் சிராய்ப்பு காயம் இருந்தது.

மருதையாபாண்டியனுக்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட சிகிச்சை விபரக்குறிப்புகளை நான் பார்த்தேன். அந்த சிகிச்சை விபரக்குறிப்புகளின் அடிப்படையில் தான் நான் காயச்சான்றிதழ் வழங்கினேன் என்றால் சரிதான். அவருக்கு கண்ணுக்கு கீழ் உள்ள எலும்பு உடைந்திருந்தது. கண்ணிற்கு உள்பக்கமுள்ள எலும்பும் உடைந்திருந்தது. இந்த 2 காயங்களும் கொடுங்காயங்கள் தான். மருதையாபாண்டியன் என்னிடம் சொன்ன விதத்தில், சொன்ன ஆயுதத்தினால் சொன்ன நேரத்தில் தாக்கப்பட்டால் அந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். இது சம்பந்தமாக நான் மருதையாபாண்டியக்கு வழங்கிய காயச்சான்றிதழ் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலிருந்து கொடுக்கப்பட்ட சிகிச்சை குறிப்புகள் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அதன் சான்றிட்ட நகல் – **எ.சா.ஆ.1** ஆகும்.

அதே தேதியில் என்னிடம் சிகிச்சைக்கு வந்த இராஜேந்திரன் என்ற நபருக்கு வலது முழங்கையில் சிராய்ப்பு காயம் இருந்தது. பின் தலையின் V வடிவத்தில் 3 x 1 cm அளவில் வெட்டுக்காயம் இருந்தது. இடது பக்க

தலையிலும் ஒரு வெட்டுக்காயம் இருந்தது. அவரை மேல்சிகிச்சைக்கு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து கிடைக்கப்பெற்ற சிகிச்சை குறிப்புகளின் படி அவருடைய காயம் சாதாரண காயம் என நான் சான்று வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் காயச்சான்று மற்றும் சிகிச்சை குறிப்புகள் அது தான். அதன் சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.2** ஆகும். என்னிடம் சொன்ன விதத்தில், சொன்ன ஆயுதத்தினால் சொன்ன நேரத்தில் தாக்கப்பட்டால் அந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

சாட்சி கடையநல்லூர், மகாராஜா மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Sabapathy, Ward Manager கடையநல்லூர், மகாராஜா மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2 ம்எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:34:15 +0530